# பொதுக்காலம் 27 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

தொடக்க நூலிலிருந்து வாசகம். 2:18-24,

பதிலுரைப்பாடல்: திபா. 128:1-6,

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம். 2:9-11,

மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 10: 2-16

## திருப்பலி முன்னுரை:

இறையாட்சிக்குரியவர்களே,

இந்த ஞாயிறு இறை வழிப்பாட்டிற்கு வந்துள்ள இறைமக்களை இறைமகன் இயேசு கிறிஸ்துவின் பெயரால் வாழ்த்துகிறோம். பொதுக்காலத்தின் இருபத்தேழாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். நாம் அனைவரும் உறவில் ஒன்றித்திருக்க இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. மனிதர்கள் எல்லோரும் கடவுளின் படைப்புகளாகிய இயற்கையோடும், மற்ற மனிதர்களோடும் ஒன்றித்து வாழ வேண்டுமென இன்றைய வாசகங்கள் எடுத்துரைக்கின்றன. சிறப்பாக அனைத்து உறவுகளுக்கும் உயிர் கொடுக்கும் திருமண உறவு பற்றி இயேசு பேசுகிறார். கணவனும் மனைவியும் அன்பில் ஒன்றித்திருக்க கடவுளால் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும் என்று இயேசு அறிவுறுத்துகிறார். அதே வேளையில், குழந்தைகளைப் போல தூய உள்ளம் கொண்டவர்களுக்கே இறையாட்சியில் இடம் கிடைக்கும் என்பதையும் அவர் தெளிவுபடுத்துகிறார். சிறு பிள்ளைகளைப் போன்று இறையாட்சியை ஏற்றுக்கொள்ளும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. பணியாற்ற அழைப்பவராம் இறைவா,

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது திருச்சபையின் மக்கள் அனைவரையும் உம்மோடும், பிறரோடும், இயற்கையோடும் நல்லுறவு கொண்டவர்களாய் உருவாக்கத் தேவையான அருளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எம் வாழ்வுக்கு ஆதரவாயுள்ள தந்தையே!

எம் நாட்டு மக்கள் அனைவரும் உமது மேலான அன்பை உணரவும், உமது திருமகனின் சிலுவை மரணத்தின் வழியாக நீர் ஏற்பாடு செய்துள்ள மீட்பின் பேறுபலன்களைப் பெற்று மகிழவும் தேவையான மனமாற்றத்தை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்கள் மருத்துவரே இறைவா,

உலகில் பரவி வரும் பண நோயினால் இயற்கை வளங்களை அழிப்பவர்களும், நீர் தந்த அழகிய சுற்றுச்சூழலை மாசுபடுத்திப் பாழாக்குபவர்களும் மனந்திரும்பி, இயற்கையுடன் நல்லுறவு கொண்டவர்களாய் வாழத் தேவையான ஆற்றலை அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. கொடைகள் அனைத்திற்கும் ஊற்றான இறைவா!

எம்மிடம் இல்லாத ஒன்று மற்றவரிடம் இருக்கும்போது, அந்தக் குறையைப் பெரிதாக்கி எம்மையே நாங்கள் தாழ்வாக மதிப்பிடும் பொறாமை என்னும் குணம் எம்மிடமிருந்து ஒழிந்து ஒரு நல்ல குணமாகிய சகிப்புத்தன்மை எம்மில் வளர, விட்டுக்கொடுப்பவர்கள் வீழ்ந்ததில்லை என்பதை உம் மூலம் அறிந்து வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. எல்லாருக்கும் எல்லாம் ஆன எம் அன்பு இறைவா!

யாரும் நினையாத ஆன்மாக்களுக்கும், மரணத்தறுவாயிலுள்ள துன்புறும் அன்பர்கள் அனைவரும் இறைமகன் இயேசுவின் நிலையான அமைதியையும், பேரின்பவீட்டின் இன்பத்தையும் முழுமையாகப் பெற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

6. எல்லாரும் எல்லாம் பெற விரும்பும் அன்பு இறைவா!

மனிதருடைய வழியோ சுயநலத்தின் வழி. ஆனால் கடவுளின் வழியோ பொறுமையின் வழி, தாழ்ச்சியின் வழி என்பதை அறிந்து அடுத்தவன் வாழ்ந்தால் தானும் வாழ முடியும் என்ற நல்லெண்ணத்தை எம் இளையோரின் உள்ளத்தில் பதிவுச் செய்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.